**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்</u>**

**<u>முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்</u>**

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 3 ம் நாள்

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17-ம் நாள் செவ்வாய்க்கிழமை

**அசல் வழக்கு எண்.1075/2017**

<u>CNR.No.TNCB17-001755-2017</u>

1. ராமாயி

2. முனியப்பன்

3. ரெங்கம்மாள்

4. வீரம்மாள்

5. முருகம்மாள்

(Amended as per order in I.A.No.142/2018 Dated 29.01.2018) ... **வாதிகள்**

//எதிர்//

புஷ்பா ... **பிரதிவாதி**

இந்த வழக்கில் வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.கார்த்திகேயன், அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.D.சித்ரா, அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

1ம் வாதியின் கணவரிடம் பிரதிவாதி கிரயம் பெற்றதாகக் கூறப்படும் 21.05.1992 தேதிய 1732/1992 என்ற எண்ணில் சூலூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரத்தை செல்லாது என்று ரத்து செய்யக்கோரியும்,

தாவா சொத்தை விற்பனை, குத்தகை, அடமானம், தானம், செட்டில்மென்ட் போன்ற எந்தவிதமான வில்லங்க விவகாரங்களுக்கும் பிரதிவாதி உட்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், செலவுத் தொகை கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. வாதிகள் தரப்பு திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம்</u>:**

1.1). 1ம் வாதியின் கணவர் K.V.முத்துசாமி என்கிற முத்துசாமி கடந்த 28.05.1979-ல் ஒரு காலியிடத்தை கிரையம் பெற்று அனுபவம் செய்து வந்து, கடந்த 14.12.2007-ம் தேதியில் அவர் காலமாகிவிட்டார். மேற்படி 1ம் வாதியின் கணவர் முத்துசாமி தாவா சொத்தை பொறுத்து எந்தவிதமான ஏற்பாடும் செய்து வைக்காமல் இறந்தபிறகு 1ம் வாதி தாவா சொத்தில் அனுபவ சுவாதீனத்திலிருந்து வசித்து வருகிறார்.

1.2). கடந்த 15.09.2014-ம் தேதியன்று தாவா சொத்திற்கு சம்பந்தம் இல்லாத பிரதிவாதி தனது கணவர் சதாசிவம் மற்றும் அடியாட்களுடன் வந்து தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து கூரை அமைக்க முயற்சி செய்ததை தடுத்து 1ம் வாதி சூலூர் காவல் நிலையத்தில் பிரதிவாதி மற்றும் அவரது கணவர் மீது புகார் கொடுத்தார். பிரதிவாதி, 1ம் வாதியின் கணவர் முத்துசாமி பிரதிவாதிக்கு தாவா சொத்தை விற்பனை செய்து விட்டார் என்று கூறியதால், காவல் நிலையத்தில் 1ம் வாதியின் புகாரை ஏற்க மறுத்துவிட்டு, நீதிமன்றம் மூலம் பரிகாரம் பெற்றுக்கொள்ள அறிவுறுத்தினர். மேலும் 1ம் வாதியின் கணவர் காலஞ்சென்ற K.V.முத்துசாமி என்கிற முத்துசாமி தாவா சொத்தை பிரதிவாதிக்கு 21.05.1992-ல் விற்பனை செய்து விட்டதாக பிரதிவாதியின் கணவர் கூறினார்.

1.3). 21.05.1992-ல் வாதியின் கணவர் தாவா சொத்தை பிரதிவாதிக்கு விற்பனை செய்யவில்லை. தாவா சொத்தை 1ம் வாதிக்கும், அவரது மக்களுக்கும்

தெரியாமல் 1ம் வாதியின் கணவர் பிரதிவாதிக்கு விற்பனை செய்ய வேண்டிய அவசியம் 1ம் வாதியின் கணவருக்கு ஏற்படவில்லை. 13.10.2014 ம் தேதியில் தாவா சொத்து குறித்து வில்லங்க சான்றிதழ் வாங்கிப்பார்த்த போது தாவா சொத்தின் கிரையப் பத்திரம் குறித்து தெரிந்து கொண்டார்.

1.4). மேற்படி கிரையபத்திரம் பற்றி கடந்த 15.09.2014-ம் தேதி தான் 1ம் வாதிக்கு தெரிய வந்தது. மேலும், பிரதிவாதி கிரையம் பெற்ற 21.05.1992 தேதிய கிரைய பத்திரத்தில் உள்ள கையெழுத்துக்கள் 1ம் வாதியின் கணவர் முத்துசாமியின் கையெழுத்துக்கள் இல்லை. "முத்துசாமி" என்ற கையெழுத்துக்கள் கிரையப் பத்திரத்தில் பக்கத்திற்கு பக்கம் வேறுபட்டுள்ளது. மேற்படி கையெழுத்துக்கள் 1ம் வாதியின் கணவருடையது இல்லை. ஆகவே. 21.05.1992-ம் தேதிய கிரையப் பத்திரம் சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல மேலும் இன்றுவரை 1ம் வாதிதான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வருகிறார்.

1.5). மேலும் 1ம் வாதியின் கணவர் K.V.முத்துசாமி என்கிற முத்துசாமியின் கையெழுத்திற்கும் பிரதிவாதியின் அசல் கிரையப் பத்திரத்தில் உள்ள கையெழுத்துக்களுக்கும் மிகுந்த வேறுபாடுகள் உள்ளன. மேலும் 1ம் வாதியின் கணவர் K.V.முத்துசாமி என்றுதான் கையெழுத்து போடுவது வழக்கமாகும். மேலும் 26.12.2005-ல் சூலூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் நகை கடனுக்கு பணம் செலுத்திய ரசீதில் K.V.முத்துசாமி என்றும், 29.10.1986-ல் இந்திய தபால் மற்றும் முதலீட்டு மாறுதல் விண்ணப்பத்தில் K.V. முத்துசாமி என்றும், 23.7.2003-ல் கிரையப் பத்திரம் ஆவண எண்: 880/1979 காணாமல் போனதற்காக சூலூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் சார்பு ரசீதில் KV.முத்துசாமி என்றும் தான் 1ம் வாதியின் கணவர் கையெழுத்து போட்டுள்ளார். மேற்படி ஆவணங்களில் உள்ள 1ம் வாதியின் கணவரின் கையெழுத்களுக்கும், பிரதிவாதியின் கிரையப் பத்திரத்தில் உள்ள கையெழுத்துக்களும் முற்றிலும் வேறுபாடு உள்ளது. மேலும் பிரதியாதியின் அசல்

கிரையப் பத்திரத்தை கையெழுத்து நிபுணரின் சோதனைக்கு உட்படுத்தினால் கையெழுத்துக்களின் உண்மைத் தன்மை வெளிப்படும்.

1.6). 1ம் வாதிக்கு வயது சுமார் 70-க்கு மேல் ஆகிறது. 1ம் வாதி தனது பேரனுடன் வசித்து வந்து தாவா சொத்தின் அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருகிறார். மேலும் 1ம் வாதியை தாவா சொத்திலிருந்து வெளியேற்ற பிரதிவாதிக்கு எந்த உரிமையும் இல்லை. எனவே தாவா பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.7). 1ம் வாதி மட்டும் தான் தாவா சொத்தில் அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருகிறார். மற்ற வாதிகள் அனைவரும் அவரவர் குடும்பத்தாருடன் வெவ்வேறு இடங்களில் வசித்து வருகிறார்கள். அதனால் மற்ற வாதிகளை கட்சி சேர்க்காமல் 1ம் வாதி மட்டும் தாவா தொடர்ந்தால் போதுமானது என்று கருதியதால் 1ம் வாதி மட்டும் இந்த தாவாவை தாக்கல் செய்தார். ஆனால் தற்போது மற்ற வாதிகளையும் கட்சி சேர்த்து வழக்கை நடத்துவது என்று முடிவு செய்து மற்ற வாதிகள் 2 முதல் 5 வாதிகளாக இந்த வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டுள்ளார்கள்.
(Amended as per order in I.A.No.142/2018 Dated 29.01.2018)

**2). பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையின் சுருக்கம்:**

2.1). வழக்கு பொய்யானது மோசடியானது, சட்டத்தின் படியும், பொருண்மைகளின் படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. பிரதிவாதிகள் ஒப்புக் கொண்டவற்றை தவிர மற்றவற்றை வாதியே நிரூபிக்க வேண்டும். வழக்குச் சொத்து முதலில் 1ம் வாதியின் கணவர் முத்துசாமிக்குச் சொந்தமானது. அவர் வழக்கு சொத்தை 21.05.1992 தேதியிட்ட கிரையப் பத்திரம் மூலம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்து, பிரதிவாதி வழக்குச் சொத்தின் முழுமையான உரிமையாளராக அனுபவித்து வருகிறார்.

2.2). வாதியின் கணவர் எப்போது இறந்தார் என்பது பிரதிவாதிக்கு தெரியாது. முத்துசாமி தனது மற்ற சொத்துக்கள் தொடர்பாக உயில் எழுதி வைத்தாரா என்பது பிரதிவாதிக்கு தெரியாது. முத்துசாமியின் மறைவுக்குப் பிறகு எந்த நேரத்திலும் வழக்குச் சொத்தை வாதிகள் வைத்திருக்கவோ, அனுபவிக்கவோ இல்லை. பிரதிவாதி பெயரில் பட்டா பெற்று, வருவாய்ப் பதிவுகளில் மாற்றம் செய்யப்பட்டது. 1ம் வாதி, தனது கணவர் கிரையப் பத்திரத்தை நிறைவேற்றியது தெரிந்தும் பிரதிவாதியின் ஆட்கள் வழக்குச் சொத்தில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதைத் தடுத்து காவல்துறையில் புகார் அளித்தார். பிரதிவாதியின் கணவர் 13.12.2014 அன்று இறந்துவிட்டார். வாதிகள் வழக்குச் சொத்தில் அத்துமீறி நுழைய முயற்சி செய்ததை பிரதிவாதி தடுத்துவிட்டார். 21.05.1992 அன்று வழக்குச் சொத்து முத்துசாமியிடமிருந்து கிரையப் பத்திரத்தின் மூலம் சட்டப்படி மறுபயனுக்காக வாங்கப்பட்டது.

2.3). கிரையப் பத்திரம் பதிவு செய்யப்பட்ட தேதியில், மேற்படி முத்துசாமி துணைப் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து, துணைப் பதிவாளர் முன்னிலையில் கிரையப் பத்திரத்தில் கையொப்பமிட்டார். மேலும் கிரையப் பத்திரத்திலும், சாட்சிகள் முன்னிலையில் துணைப் பதிவாளர் அலுவலகத்தால் பராமரிக்கப்படும் பதிவிலும் தனது கைரேகையை பதித்தார். எனவே, 1ம் வாதிக்கு தனது கணவர் முத்துசாமியால் நிறைவேற்றப்பட்ட 21.05.1992 தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் செல்லுபடித் தன்மையைக் கேள்வி கேட்க உரிமை இல்லை. எனவே வாதியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**3). வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் வழக்கு சான்றாவணங்கள் ஆகியவற்றை நன்கு பரிசீலனை செய்து கடந்த 17.07.2025 அன்று கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டது.**

**4). எழுவினாக்கள்:**

| | |
|---|---|
| **எழுவினா - 1** | 21.05.1992 தேதியன்று பிரதிவாதி சட்டப்படியான மறுபயன் கொடுத்து முத்துசாமியிடம் சொத்தை கிரயம் பெற்றுள்ளாரா? |
| **எழுவினா - 2** | 21.05.1992 தேதிய கிரைய ஆவணம் செல்லாது எனக் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதா? |
| **எழுவினா - 3** | தாவா சொத்து குறித்து கோரும் நிரந்தர தடை உத்தரவு கிடைக்கத்தக்கதா? |
| **எழுவினா - 4** | வேறு பரிகாரம் என்ன? |

5). இருதரப்பினருக்கும் இடையே உள்ள பிரச்சினைக் குறித்து முழுமையான தீர்வு காண வேண்டி எழுவினாக்கள் பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

**6). மாற்றியமைக்கப்பட்ட எழுவினாக்கள் :-**

| | |
|---|---|
| **எழுவினா - 1** | 21.05.1992 தேதியிட்ட கிரைய ஆவணத்தில் உள்ள கையெழுத்து முத்துசாமியின் கையெழுத்து அல்ல என்பது வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா? |
| **எழுவினா - 2** | 21.05.1992 தேதியில் உள்ள கையெழுத்து வேறுபாடு உள்ளது என்பது வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா? |
| **எழுவினா - 3** | 21.05.1992 தேதியிட்ட கிரைய ஆவணம் செல்லாது எனக் கூறும் பரிகாரம் கிடைக்கத்தக்கதா? |
| **எழுவினா - 4** | வாதிகள் வழக்கு சொத்தின் சட்டப்படியான அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் உள்ளார்களா? |
| **எழுவினா - 5** | வாதிகள் கோரிய நிரந்த உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு |

| | |
|---|---|
| | கிடைக்கத்தக்கதா? |
| **எழுவினா - 6** | வேறு பரிகாரம் என்ன? |

7). இரு தரப்பு சான்றாவணங்களை பரிசீலனை செய்து மாற்றி அமைக்கப்பட்ட எழுவினாக்கள் தொடர்பாக புதிய சாட்சியங்கள் எதுவும் முன்னிடத் தேவை இல்லை என்று இந்நீதிமன்றம் மனநிறைவு கொள்கிறது.

**8). இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் விபரம் :-**

இவ்வழக்கில் வாதிகள் தரப்பில், 2ம் வாதி முனியப்பன் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. 3ம் நபரான பூபாலசுப்பிரமணியம் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.12 முதல் வா.சா.ஆ.15 ஆவணங்களும் வா.சா.2 குறுக்கு விசாரணையின் போது பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டது. பிரதிவாதி தரப்பில், பிரதிவாதி புஷ்பா பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. சூலூர் சார்பதிவாளர் அலுவலக உதவியாளர் செல்வராஜ் பி.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.

**9). வாதிகள் தரப்பு சாட்சி மற்றும் ஆவணம்:-**

வா.சா.1 மூலமாக 27.06.1979 தேதியிட்ட முத்துசாமி பெற்ற கிரையப் பத்திரம் வா.சா.ஆ.1 ஆகவும், 14.12.2007 தேதியிட்ட முத்துசாமியின் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.2 ஆகவும், 28.05.1979 தேதியிட்ட முத்துசாமி பெற்ற கிரய பத்திரம் வா.சா.ஆ.3 ஆகவும், 10.01.2009 தேதியிட்ட முத்துசாமியின் வாரிசு சான்றிதழ் வா.சா.ஆ.4 ஆகவும், 13.10.2014 தேதியிட்ட தாவா சொத்தின் வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ.5 ஆகவும், 21.05.1992 தேதியிட்ட பிரதிவாதி பெயரில் உள்ள கிரய பத்திரம் வா.சா.ஆ.6 ஆகவும்,

26.12.2006 தேதியிட்ட சூலூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி ரசீது வா.சா.ஆ.7 ஆகவும், 29.10.1986 தேதியிட்ட இந்திய தபால் மற்றும் முதலீட்டு மாறுதல் விண்ணப்பம் வா.சா.ஆ.8 ஆகவும், 06.10.1983 தேதியிட்ட வருமான வரி Clearance Certificate வா.சா.ஆ.9 ஆகவும், 23.07.2003 தேதியிட்ட சூலூர் காவல் நிலைய புகார் ஏற்பு ரசீது வா.சா.ஆ.10 ஆகவும், 2005 முதல் 2009 தேதியிட்ட 1ம் வாதியின் குடும்ப அட்டை வா.சா.ஆ.11 ஆகவும், வா.சா.2 மூலமாக, பல்லடம் தனிவட்டாட்சியர் அவர்கள் முத்துசாமி பெயரில் வழங்கிய மனைவரி தோராய பட்டா எண்1311 வா.சா.ஆ.12 ஆகவும், 03.07.2014 தேதியிட்ட மன்ற துணை வட்டாட்சியர் அவர்கள் கொடுத்த பட்டா மாறுதல் உத்தரவு வா.சா.ஆ.13 ஆகவும், 03.07.2014 தேதியிட்ட நத்தம் நில வரி திட்ட தூய சிட்டா வா.சா.ஆ.14 ஆகவும், பூபாலசுப்பிரமணியத்தின் ஆதார் அடையாள அட்டை வா.சா.ஆ.15 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>10). பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் ஆவணம்:-</u>**

வா.சா.2 குறுக்கு விசாரணையின் போது, 28.03.2014 தேதியிட்ட தான செட்டில்மென்ட் பத்திரம் பி.சா.ஆ.1 ஆகவும், பட்டா எண்.1311 க்கான கணினி சிட்டா பி.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது. பி.சா.1 மூலமாக ஆவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. பி.சா.2 மூலமாக, 14.02.2026 தேதியிட்ட சூலூர் சார் பதிவாளர் வழங்கிய அனுமதி கடிதம் சா.சா.ஆ.1 ஆகவும், 28.05.1979 தேதியிட்ட கிரய ஆவண எண்.880/1979 கொண்ட கிரய பத்திரம் சா.சா.ஆ.2 ஆகவும், 27.06.1979 தேதியிட்ட கிரய ஆவண எண்.1085/1979 கொண்ட கிரய பத்திரம் சா.சா.ஆ.3 ஆகவும், 21.05.1992 தேதியிட்ட கிரய ஆவண எண்.1732/1992 கொண்ட கிரய பத்திரம் சா.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது.

**<u>11). வாதிகள் தரப்பு எழுத்து பூர்வமான வாதம் :-</u>**

11.1). வாதி தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தின் போது, 1ம் வாதியின் கணவர் முத்துசாமிக்கு தாவா சொத்தை விற்பனை

செய்வதற்கான எந்த அவசியமும் ஏற்படவில்லை. மேலும் தற்போது வரை வாதிகள் தான் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள். மேலும் பிரதிவாதி தெரிவிப்பது போல் உண்மையிலேயே பிரதிவாதி 1ம் வாதியின் கணவர் முத்துசாமியிடம் இருந்து தாவா சொத்தை மறுபயன் கொடுத்து வாங்கி இருப்பின் பிரதிவாதி தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருந்திருப்பார். உண்மையிலேயே எந்த மறுபயனும் கொடுத்து பிரதிவாதி தாவா சொத்தை வாங்கவில்லை என்பதால் மட்டுமே தற்போது வரை பிரதிவாதி தாவா சொத்தை சுவாதீனத்தில் எடுக்க எந்தவிதமான புகாரோ, சட்டப்படியான நடவடிக்கைகளோ எடுக்கவில்லை.

11.2). மேலும், வா.சா.ஆ.12 மனைவரி தோராய பட்டாவில் வழக்கு சொத்தின் புதிய க.ச.எண்.569/9 என குறிப்பிடப்பட்டுள்ளது. 1991-ம் ஆண்டிலேயே தாவா சொத்திற்கு பழைய க.ச.எண்.409/2B2 என்பதற்கு பதிலாக புதிய க.ச.எண். 569/9 வழங்கப்பட்டுள்ளது. உண்மையிலேயே பிரதிவாதி 1ம் வாதியின் கணவர் K.V முத்துசாமியிடம் இருந்து முறையான மறுபயன் கொடுத்து வா.சா.ஆ.6 கிரைய பத்திரத்தை ஏற்படுத்தி கொண்டிருந்தால் பிரதிவாதி வா.சா.ஆ.6 கிரைய பத்திரத்தில் புதிய க.ச.எண் மற்றும் பட்டா எண்ணை குறிப்பிட்டிருப்பார். மேலும் பிரதிவாதி குறுக்குவிசாரணையிலேயே புதிய க.ச.எண் மற்றும் பழைய க.ச எண் மாறுபாடு உள்ளது என்றும் மேற்படி புதிய க.ச எண்ணையும், பட்டா எண்ணையும் வா.சா.ஆ 6 கிரைய பத்திரத்தில் குறிப்பிடவில்லை என ஒப்புக்கொண்டுள்ளார்.

11.3). மேற்படி தாவா சொத்தின் பட்டாவானது கடந்த 2019-ம் ஆண்டு வரை வாதியின் கணவர் K.V முத்துசாமி அவர்களின் பெயரில் தான் இருந்தது. உண்மையிலேயே பிரதிவாதி தாவா சொத்தை மறுபயன் கொடுத்து கிரையம் பெற்றிருந்தால் வா.சா.ஆ.6 கிரைய பத்திரம் ஏற்படுத்திக்கொண்ட 1992-ம் ஆண்டிலேயே 1ம் வாதியின் கணவர் K.V முத்துசாமி அவர்களின் பெயரில் இருந்து பிரதிவாதியின் பெயருக்கு பட்டா மாறுதல் செய்திருப்பார். ஆனால் பிரதிவாதி 1ம்

வாதியின் கணவரிடம் இருந்து மறுபயன் எதுவும் செலுத்தி கிரையம் பெறாமல் பிரதிவாதி கிரைய பத்திரத்தை தயார் செய்து கொண்டதால் தான் 25 வருடங்களுக்கு மேலாக வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்த 5 வருடங்களுக்கு பின்னர் தான் பிரதிவாதி அவரது பெயரை பட்டாவில் மாற்றம் செய்துள்ளார். மேலும் பிரதிவாதி குறுக்குவிசாரணையில் பட்டாவில் பெயர் மாற்றம் 2019-ம் ஆண்டுதான் செய்யப்பட்டது என்பதை ஒப்புக்கொண்டுள்ளார்.

11.4). 1ம் வாதியின் கணவர் K.V முத்துசாமி கடந்த 1982-ம் ஆண்டிலிருந்து 2/100, 4-வது குறுக்குத்தெரு, மதியழகன் நகர், சூலூர், கோயம்புத்தூரில் தான் குடியிருந்துள்ளார். ஆனால் தாவா சொத்தை 1ம் வாதியின் கணவர் K.V முத்துசாமி பிரதிவாதிகளுக்கு 1992-ம் விற்பனை செய்ததாக சொல்லப்படும் வா.சா.ஆ.6 கிரைய பத்திரத்தில் 1ம் வாதியின் கணவர் K.V முத்துசாமி அவர்களின் முகவரி கதவு எண்.43, மதியழகன் நகர் என குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையிலேயே K.V முத்துசாமி பிரதிவாதிக்கு தாவா சொத்தை கிரையம் செய்து கொடுத்திருந்தால் 1992- ஆண்டு K.V முத்துசாமி வசித்துக்கொண்டிருந்த 2/100, 4-வது குறுக்குத்தெரு, மதியழகன் நகர், சூலூர், கோயம்புத்தூர் வீட்டின் முகவரியை தான் கிரைய பத்திரத்தில் குறிப்பிட்டு இருப்பார். ஆனால் பிரதிவாதி அவராகவே ஆவணத்தை தயாரித்துக்கொண்டதால் தான் வா.சா.ஆ.6 கிரையப்பத்திரத்தில் முந்தைய ஆவணமான 27.06.1979-ம் தேயன்று முத்துசாமி கிரையம் பெற்ற வா.சா.ஆ.1-ல் உள்ள முகவரியை குறிப்பிட்டுள்ளார்கள்.

11.5). வாதிகள் மீது தற்போது வரை பிரதிவாதி சுவாதீனம் வேண்டியோ, வாதிகள் தாவா சொத்தில் உறுத்துக்கட்டளை விதிக்க வேண்டியோ எந்த வித சட்ட நடவடிக்கையோ, புகாரோ, வழக்கோ பிரதிவாதி தாக்கல் செய்யவில்லை. மேலும் பிரதிவாதியின் மருமகன் காவல் நிலையத்தில் பணியாற்றிய போதும் பிரதிவாதி தாவா வழக்கு தொடர்பாக வாதிகளுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

11.6). பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் தாவா சொத்தில் ஒரு ஷெட் போட முயற்சி செய்து கொண்டு இருந்த போது பிரதிவாதியின் கணவர் 13.12.2014-ம் தேதி இறந்துவிட்டார் என்றும் அதன் பின் பிரதிவாதியால் தாவா சொத்தில் கட்டிடம் கட்ட முடியாமல் உள்ளது. ஆனால் இன்னும் ஷெட் போட அமைத்த இரும்பு தூண்கள் தாவா சொத்துல் உள்ளன என்று தெரிவித்துள்ளார். ஆனால் பிரதிவாதி அவரது குறுக்கு விசாரணையில், பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திற்கும், எதிர்வழக்குரைக்கும் சம்மந்தம் இல்லாதபடி "எனது பிரமாண வாக்குமூலத்தில், பத்தி 2 ல், ஷெட் போட கால் மட்டும் ஊன்றியிருப்பதாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. அதில் லெட்டின் குழி தோண்டியுள்ளோம், ஷெட் போட்டுள்ளோம், பொருட்கள் உள்ளது." என சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வா.சா.ஆ.6 கிரைய ஆவணம் ஏற்ப்படுத்தப்பட்ட 1992 காலங்களில் கிரையம் கொடுப்பவர் கிரையம் வாங்குபவர் யார் என்று அடையாளம் காண எந்த ஆவணமும் மேற்படி நபர்களிடம் இருந்து சார்பதிவாளர் அலுவலகத்தில் வாங்கப்படாது. உடன் வந்த சாட்சிகளும் இன்னார் என்று நிரூபித்தவர்களும் தான் மேற்படி நபர்களை அடையாளம் காண்பிக்க வேண்டும்.

11.7). பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.ஆ.6 கிரைய ஆவணத்தில் உள்ள சாட்சிகளையோ, இன்னாறென்று நிரூபித்தவர்களையோ சாட்சிகளாக விசாரிக்கவில்லை. மேற்படி வா.சா.ஆ.6 கிரைய ஆவணத்தில் சாட்சிகள் இருவருமே பிரதிவாதியின் கணவருக்கு பழக்கமானவர்களாக இருக்கும் பட்சத்தில் மேற்படி பி.சா.ஆ.2 சாட்சியத்தின் படி இரண்டு சாட்சிகள் காண்பிக்கும் நபர் தான் கிரையம் கொடுக்கும் நபர் என ஏற்றுக்கொள்ளப்படும் ஆனால் வா.சா.ஆ.6-ல் சாட்சிகளாக கையெழுத்து செய்துள்ள இரண்டு நபர்களுமே பிரதிவாதியின் கணவருக்கு பழக்கமானவர்கள். இவ்வாறு இருக்கையில் எப்படி சாட்சிகளுக்கு வாதியின் கணவர்

முத்துசாமி அவர்களை அடையாளம் காண்பிக்க முடியும்.

11.8). K.V.முத்துசாமி என்கிற முத்துசாமி அவர்கள் கடந்த 1983-ம் ஆண்டிலிருந்து அவர் மறைந்த வரை K.V.முத்துசாமி என்று தான் கையெழுத்து செய்வதை வழக்கமாக வைத்துள்ளார். மேற்படி வாதிகள் தரப்பில் அதை நிரூபிக்கவே வா.சா.ஆ.7 முதல் வா.சா.ஆ 9 ஆவணம் தாக்கல் செய்யபட்டுள்ளது. மேலும் உள்ள 1ம் வாதியின் கணவரின் மேற்படி ஆவணங்களில் கையெழுத்துக்களுக்கும் வா.சா.ஆ.6 கிரையப் பத்திரத்தில் உள்ள கையெழுத்துகளும் முற்றிலும் வேறுபாடு உள்ளது. மேலும் மேற்படி வா.சா.ஆ.6 கிரைய பத்திரத்தில் பக்கத்திற்கு பக்கம் கையெழுத்துகளில் மாறுபாடு உள்ளது.

11.9). இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 73-ன் படி நீதிமன்றமே கையெழுத்துக்களை ஒப்பீடு செய்து பார்க்கலாம். வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இத்தாவா வழக்கை பொருத்தவரை 1ம் வாதியின் கணவர் K.V.முத்துசாமி என்கிற முத்துசாமி அவர்கள் கடந்த 1983-ம் ஆண்டிலிருந்து அவர் மறைந்த வரை K.V.முத்துசாமி என்று தான் கையெழுத்து செய்வதை வழக்கமாக வைத்துள்ளார். ஆனால் வா.சா.ஆ.6 கிரைய ஆவணத்தில் 1ம் வாதியின் கணவருடைய கையெழுத்து முத்துசாமி என்று உள்ளது.

11.10). பிரதிவாதி தரப்பில் லெட்டின் குழி தோண்டியதற்கும், ஷெட் போட்டதற்கும் பொருட்கள் உள்ளது என்பதற்கும் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. மேலும் தற்போது வரை தாவா சொத்திற்குரிய அசல் மூல ஆவணம் மற்றும் அசல் பட்டாவையும் பிரதிவாதி இம்மாண்புமிகு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என வாதிடப்பட்டது.

**<u>12). பிரதிவாதி தரப்பு வாதத்தின் சுருக்கம் :-</u>**

12.1). பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தின் போது வழக்குச் சொத்து முதலில் 1ம் வாதியின் கணவர் முத்துசாமிக்குச் சொந்தமானது. அவர் வழகககு சொத்தை 21.05.1992 தேதியிட்ட கிரையப் பத்திரத்திரம் மூலம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்து, பிரதிவாதி வழக்குச் சொத்தின் முழுமையான உரிமையாளராக அனுபவித்து வருகிறார்.

12.2). 1ம் வாதியின் கணவர் எப்போது இறந்தார் என்பது பிரதிவாதிக்கு தெரியாது. முத்துசாமி தனது மற்ற சொத்துக்கள் தொடர்பாக உயில் எழுதி வைத்தாரா என்பது பிரதிவாதிக்கு தெரியாது. முத்துசாமியின் மறைவுக்குப் பிறகு எந்த நேரத்திலும் வழக்குச் சொத்தை வாதிகள் வைத்திருக்கவோ, அனுபவிக்கவோ இல்லை. பிரதிவாதி பெயரில் பட்டா பெற்று, வருவாய் பதிவுகளில் மாற்றம் செய்யப்பட்டது. 1ம் வாதி, தனது கணவர் கிரையப் பத்திரத்தை நிறைவேற்றியது தெரிந்தும், பிரதிவாதியின் ஆட்கள் வழக்குச் சொத்தில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதைத் தடுத்து காவல்துறையில் புகார் அளித்தார். பிரதிவாதியின் கணவர் 13.12.2014 அன்று இறந்துவிட்டார். வாதிகள் வழக்குச் சொத்தில் அத்துமீறி நுழைய முயற்சி செய்ததை பிரதிவாதி தடுத்துவிட்டார். 21.05.1992 அன்று வழக்குச் சொத்து முத்துசாமியிடமிருந்து கிரையப் பத்திரத்தின் மூலம் சட்டப்படி மனுபயனுக்காக வாங்கப்பட்டது.

12.3). கிரையப் பத்திரம் பதிவு செய்யப்பட்ட தேதியில், மேற்படி முத்துசாமி துணைப் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து, துணைப் பதிவாளர் முன்னிலையில் கிரையப் பத்திரத்தில் கையொப்பமிட்டார். மேலும் கிரையப் பத்திரத்திலும், சாட்சிகள் முன்னிலையில் துணைப் பதிவாளர் அலுவலகத்தால் பராமரிக்கப்படும் பதிவிலும் தனது கைரேகையை பதித்தார். எனவே, 1ம் வாதிக்கு தனது கணவர் முத்துசாமியால் நிறைவேற்றப்பட்ட 21.05.1992 தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் செல்லுபடித்

தன்மையைக் கேள்வி கேட்க உரிமை இல்லை. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என வாதிடப்பட்டது.

**13). எழுவினா 1 முதல் 3-க்கான தீர்வு :-**

| | |
|---|---|
| **எழுவினா - 1** | 21.05.1992 தேதியிட்ட கிரைய ஆவணத்தில் உள்ள கையெழுத்து முத்துசாமியின் கையெழுத்து அல்ல என்பது வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா? |
| **எழுவினா - 2** | 21.05.1992 தேதியில் உள்ள கையெழுத்து வேறுபாடு உள்ளது என்பது வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா? |
| **எழுவினா - 3** | 21.05.1992 தேதியிட்ட கிரைய ஆவணம் செல்லாது எனக் கூறும் பரிகாரம் கிடைக்கத்தக்கதா? |

**13.1). இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101-ன்படி தரப்பினர் எவர் ஒருவர் தனது சட்டப்படியான உரிமை அல்லது பொறுப்பு குறித்து தான் கூறும் சங்கதியை நீதிமன்றம் ஏற்று தீர்ப்பு வழங்கவேண்டும் என்ற சங்கதியை முன் வைக்கின்றாரோ, அந்தநபரே அந்த சங்கதியை மெய்ப்பிக்கவேண்டியதாகும்.**

13.2). இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது. வாதிகள் தரப்பு வழக்கானது K.V. முத்துசாமி என்கிற முத்துசாமிக்கு 26.07.1979 தேதியிட்ட கிரைய ஆவணம் மூலம் வழக்கு சொத்து பாத்தியப்பட்டது. K.V.முத்துசாமி என்ற முத்துசாமி தாவா சொத்தைப் பொறுத்து எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் இறந்துவிட்டார். 15.092014 - ம் தேதி அன்று பிரதிவாதி தாவா சொத்திற்குள் அத்துமீறி நுழைந்து கூரை அமைக்க முயற்சி செய்தனர். அது சம்பந்தமாக அதை தடுத்து நிறுத்தி சூலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபோது சிவில் நீதிமன்றத்தை அணுகுமாறு சொல்லிவிட்டனர். 21.05.1992 தேதியில் தாவா

சொத்தை முத்துசாமி பிரதிவாதிக்கு விற்பனை செய்யவில்லை. மேற்படி 21.05.1992 கிரையப் பத்திரத்தில் உள்ள கையெழுத்துக்கள் முத்துசாமியின் கையெழுத்துக்கள் இல்லை அதில் உள்ள கையெழுத்து வேறுபட்டுள்ளது. எனவே 21.05.1992 தேதிய கிரையப் பத்திரம் செல்லாது என தீர்ப்பு வழங்க வேண்டும் என்பது வாதி தரப்பு வழக்காகும்.

13.3). பிரதிவாதி தரப்பு வழக்கானது 21.05.1992 தேதியிட்ட கிரைய ஆவணம் மூலமாக முத்துசாமி எந்த வருடம் தகுந்த மாதிரி கொடுத்து பிரதிவாதி கிரையம் பெற்றார். தாவா சொத்து முத்துசாமியின் சுய சம்பாத்திய சொத்து ஆகும். பிரதிவாதி கிரயம் பெற்ற பின் தாவா சொத்திற்கு வருவாய் துறையில் கூட்டு பட்டா பெற்றுள்ளார். 21.05.1992 தேதியில் முத்துசாமி என்பவர் நேரடியாக சூலூர் சார் பதிவாளர் அலுவலகம் வந்து கையொப்பம் மற்றும் கைரேகை வைத்து தாவா சொத்தை கிரயம் செய்து கொடுத்தார். மேற்படி விபரம் வாதிகளுக்கு 1992 ஆம் வருடமே தெரியும். மேற்படி வழக்கு 1992 ஆம் வருடம் தாவா சொத்து கிரையமான பின் 22 வருடங்கள் கழித்து காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. முத்துசாமி 2007 ஆம் வருடம் இறக்கும் வரை கிரையம் மோசடியானது என புகார் ஏதும் தெரிவிக்கவில்லை. மேற்படி வழக்கு எவ்வித முகாந்திரமும் மூல காரணம் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்பதாகும்.

13.4). வாதி தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்கள் மூலமாக வாதி தரப்பு வழக்கானது நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதை பரிசீலிக்க வேண்டும். வா.சா.ஆ.1, 27.06.1979 தேதியிட்ட கிரைய ஆவணத்தை பரிசீலனை செய்கையில் முத்துசாமி வழக்கு சொத்தை கிரயம் பெற்றுள்ளார் என்பதை அறிய முடிகிறது. மேற்படி ஆவணத்தில் முத்துசாமி என குறிப்பிடப்பட்டுள்ளது அதில் தாக்கல் செய்தவர் என்ற இடத்திலும் முத்துசாமி என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2

ஆவணத்தை பரிசீலனை செய்கையில் K. V. முத்துசாமி 14.12.2006 தேதியில் இறந்துவிட்டார் என்பது நிரூபனமாகிறது.

13.5). வா.சா.ஆ.3 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் 28.05.1979 தேதியில் முத்துசாமி சூலூர் கிராமம் க.ச.49/2B2 காலையில் உள்ள வழக்கு சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்பதை அறிய முடிகிறது. மேற்படி ஆவணத்திலும் முத்துசாமி என குறிப்பிடப்பட்டுள்ளது. தாக்கல் செய்தவர் கையெழுத்து என்ற இடத்திலும் முத்துசாமி என குறிப்பிட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.4 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் முத்துசாமிக்கு இராமாயி என்ற மனைவி, முனியப்பன் என்ற மகனும், ரங்கம்மாள், வீரம்மாள், முருகம்மாள் என்ற மகள்களும் உள்ளனர் என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.4 வாரிசு சான்றிதழில் முத்துசாமி என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. K.V. முத்துசாமி எனக் குறிப்பிடவில்லை என்பதை அறியமுடிகிறது. வா.சா.ஆ.6 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் 21.05.1992 தேதியில் வீராசாமி குமாரர் முத்துசாமி, பிரதிவாதிக்கு கிரையப்பத்திரம் எழுதிக் கொடுத்ததாக கண்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் முத்துசாமி என பெயர் குறிப்பிடப்பட்டு, தாக்கல் செய்தவர் என்ற இடத்தில் முத்துசாமி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

13.6). வாதி தரப்பில் வா.சா.ஆ.6, 21.05.1992 தேதியிட்ட கிரைய ஆவணத்தில் உள்ளது முத்துசாமியின் கையெழுத்து இல்லை என்றும், மேற்படி முத்துசாமி K. V. முத்துசாமி என்றுதான் கையெழுத்து செய்வார் என்றும், மேற்படி ஆவணத்தில் உள்ள முத்துசாமி என்ற கையெழுத்து 2 முதல் 4 வாதிகளின் தந்தை மற்றும் 1ம் வாதியின் கணவரான முத்துசாமியின் கையெழுத்து இல்லை என வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது. வாதி தரப்பில் வா.சா.ஆ.7, 26.12.2006 தேதியிட்ட சூலூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கான நகை கடன் பணம் செலுத்து ரசீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது அதில் K.V.முத்துசாமி என பெயர் குறிப்பிடப்பட்டு

K.V. முத்துசாமி என பணம் செலுத்துபவரின் கையொப்பம் இடப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

13.7). வா.சா.ஆ.8 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் இந்திய அஞ்சல் துறையில் இருந்து வந்த கடிதம் என்பதும், அதில் K. V. முத்துசாமி என பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும் K. V. முத்துசாமி என கையொப்பம் செய்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. மேலும் வா.சா.ஆ.9 (Income Tax Clearance Certificate) -யை பரிசீலனை செய்கையில் அதில் K. V. முத்துசாமி என பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.10 காவல் நிலைய ரசீது ஆவணத்தை பரிசீலனை செய்கையில் அதில் புகார் கொடுத்தவரின் பெயர் K. V. முத்துசாமி என குறிப்பிட்டு, அதில் ரசீதை பெற்றுக் கொண்டேன் என்ற இடத்தில் K.V. முத்துசாமி என கையொப்பமிடப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.11 ஆக முத்துசாமி குடும்ப அட்டை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் முத்துசாமி இராமாயி என குறிப்பிடப்பட்டுள்ளது. K. V. முத்துசாமி எனக் குறிப்பிடவில்லை என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.12 மனைவரி தோராய பட்டாவை பரிசீலனை செய்கையில் வீராசாமி மகன் முத்துசாமி என குறிப்பிடப்பட்டு சர்வே எண்.569/9 பட்டா வழங்கப்பட்டுள்ளது என்பதையும், K. V. முத்துசாமி எனக் குறிப்பிடவில்லை என்பதையும் அறியமுடிகிறது.

13.8). வா.சா.ஆ.13 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் மண்டல துணை வட்டாட்சியர் அவர்களின் உத்தரவு என்பதும், அதில் சூலூர் கிராமம் சர்வே எண்.569/9 சொத்தானது முனியப்பன் மகன் பூபாலசுப்பிரமணியம் பெயரை பட்டாவில் பட்டா எண் 1311-ல் கூட்டாக தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது என கண்டுள்ளது. வா.சா.ஆ.14 நத்தம் நிலவரித் திட்ட தூய சிட்டாவை பரிசீலனை செய்கையில் சர்வே எண்.569/9 என்பது வீராசாமி மகன் முத்துசாமி, முனியப்பன் மகன் பூபாலசுப்பிரமணியம் ஆகியோர் பெயரில் பட்டா எண் 1311 ஏற்பட்டுள்ளது என்பதையும்,

வா.சா.ஆ.14 ஆவணத்தில் K. V. முத்துசாமி எனக் குறிப்பிடவில்லை என்பதையும் அறிய முடிகிறது.

13.9). மேலும் வா.சா.1 குறுக்கு விசாரணையின் போது வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் கண்ட சொத்து என் தகப்பனாரின் சுய சம்பாத்திய சொத்து ஆகும். பத்திரம் வாங்கியவர் என்ற இடத்தில் முத்துசாமி என மட்டும் கையொப்பம் செய்துள்ளார் என்றும், K.V. முத்துசாமி என்று இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 சூலூர் மதியழகன் நகர் 43 நம்பர் இல்லத்தில் வசிக்கும் வீராசாமி மகன் கூலி வேலை முத்துசாமி என மட்டும் உள்ளது என்றும் K.V. முத்துசாமி இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் தாக்கல் செய்தவர் கையொப்பம் முத்துசாமி என உள்ளது என்றும் K.V.முத்துசாமி என்று இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் வீராசாமி மகன் முத்துசாமி என மட்டும் உள்ளது என்றும் K.V. முத்துசாமி என்று இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் தாக்கல் செய்தவர் கையொப்பம் முத்துசாமி என உள்ளது என்றும் K.V. முத்துசாமி என்று இல்லை என்றால் சரிதான் என சாட்சியமளித்துள்ளார்.

13.10). வா.சா.2 குறுக்கு விசாரணையின் போது வா.சா.ஆ.3 ஆவணத்தை வள்ளியம்மாளிடம் இருந்து எனது தாத்தா கிரையம் பெற்றார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை சார் பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்து கையொப்பம் செய்தவர் என்ற இடத்தில் முத்துசாமி என என் தாத்தா கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் வழக்கிற்கான மூல ஆவணம் என்றால் சரிதான் மேற்படி ஆவணத்தை சார் பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்து கையொப்பம் செய்தவர் என்ற இடத்தில் முத்துசாமி என என் தாத்தா கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். மேலும் என் தாத்தா உயிருடன் இருந்த வரையில் கிரைய பத்திரம் செல்லாது என்று வழக்கு தொடுக்கவில்லை என்றும், காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

13.11). மேற்படி சாட்சியத்தில் இருந்து வா.சா.ஆ.1 மற்றும் 3 ஆவணங்களில் முத்துசாமி என கையெழுத்தும், தாக்கல் செய்தவர் என்ற இடத்தில் முத்துசாமி என கையொப்பம் செய்துள்ளார் என்பது நிரூபணமாகிறது. மேலும் மேற்படி 21.05.1992 ஆம் தேதியில் மேற்படி கிரைய பத்திரத்தில் உள்ள கையெழுத்து முத்துசாமியுடையது அல்ல என சொல்லியுள்ள நிலையில், 2007 ஆம் வருடம் முத்துசாமி இறந்துள்ளார். ஆனால் முத்துசாமி 1992 முதல் 2007-ல் அவர் இறக்கும் வரை மேற்படி கிரையப் பத்திரம் சம்பந்தமாக எவ்வித புகாரோ, நடவடிக்கையோ எடுக்கவில்லை என்பதும் நிரூபணமாகிறது.

13.12). பி.சா.2 ஆக சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து உதவியாளர் சாட்சியமளித்துள்ளார். அவர் மூலமாக 28.05.1975 தேதியிட்ட கிரைய ஆவணம் சா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அது வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சாட்சியத்திலும் வா.சா.ஆ.1, வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணத்தில் முத்துசாமி என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும், அதை தாக்கல் செய்தவர் என்ற இடத்தில் முத்துசாமி என்று மட்டும் கையொப்பம் செய்துள்ளார் என்பது அறிய முடிகிறது.

13.13). மேற்கண்ட பரிசீலனையிலிருந்து முத்துசாமியிடமிருந்து 21.05.1992 தேதியிட்ட கிரைய ஆவணம் மூலம் பிரதிவாதி வழக்கு சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்பதும் பின்னிட்டு, பிரதிவாதி பெயர் கூட்டு பட்டாவில் சேர்க்கப்பட்டுள்ளது என்பதும் நிரூபணமாகிறது.

13.14). K.V. முத்துசாமி என்கிற முத்துசாமி அவர்கள் கடந்த 1983-ம் ஆண்டிலிருந்து அவர் மறைந்த வரை K.V. முத்துசாமி என்று தான் கையெழுத்து செய்வதை வழக்கமாக வைத்துள்ளார். மேற்படி வாதிகள் தரப்பில் அதை நிரூபிக்கவே வா.சா.ஆ.7 முதல் வா.சா.ஆ.9 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என

சொல்லப்பட்டுள்ளது. ஆனால் வழக்குரை மற்றும் சாட்சியத்தில் K.V. முத்துசாமி என்கிற முத்துசாமி அவர்கள் கடந்த 1983-ம் ஆண்டிலிருந்து அவர் மறைந்த வரை K.V. முத்துசாமி என்று தான் கையெழுத்து செய்வதை வழக்கமாக வைத்துள்ளார் என குறிப்பிடப்பட்டு சொல்லாமல் வாதத்தின் போது மட்டுமே சொல்லப்பட்டுள்ளது. எனவே வழக்குரையில் சொல்லாதவற்றை குறித்து வாதத்தில் சொல்லியுள்ளது எற்கத்தக்கதல்ல.

13.15). மேற்கண்ட பரிசீலனையிலிருந்து வா.சா.ஆ.1, வா.சா.ஆ.3, வா.சா.ஆ.4, வா.சா.ஆ.6, வா.சா.ஆ.11 மற்றும் 12 ஆவணங்களிலும் முத்துசாமி என பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. வாதி தரப்பில் சொல்லப்பட்டவாறு K.V. முத்துசாமி என பெயர் குறிப்பிடவில்லை. பின்னிட்டு சொல்லப்பட்டுள்ள வாதி தரப்பு ஆவணங்களான வா.சா.ஆ.7 முதல் வா.சா.ஆ.9 ஆகியவற்றில் K. V. முத்துசாமி என பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.6, 21.05.1992 தேதியிட்ட கிரைய ஆவணத்திலும், வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.3 கிரைய ஆவணங்களிலும் முத்துசாமி என பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் தாக்கல் செய்தவர் என்ற இடத்திலும் முத்துசாமி என்றுதான் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே 2 முதல் 4 வாதிகளின் தகப்பனார் பெயர் முத்துசாமி என்பது தவறு என்றும், K.V. முத்துசாமி என்பது தான் சரியானது என்பது ஏற்கத்தக்கதல்ல.

13.16). மேலும் 21.05.1992 தேதியிட்ட கிரைய ஆவணத்தில் உள்ள முத்துசாமியின் கையெழுத்து முத்துசாமியுடையது இல்லை என சொல்லியுள்ள நிலையில், கையெழுத்து மாறுபட்டுள்ளது என சொல்லியுள்ள நிலையில், 21.05.1992 தேதியிட்ட கிரைய ஆவணத்தில் உள்ள முத்துசாமியின் கையெழுத்து மற்றும் கைரேகையும் ஒப்புக்கொள்ளப்பட்ட மற்ற கிரைய ஆவணங்களில் உள்ள முத்துசாமியின் கையெழுத்து மற்றும் கைரேகையும் வேறு வேறானது என்பதை நிரூபிக்கும் விதமாக அசல் ஆவணத்தை தாக்கல் செய்யுமாறு மனு தாக்கல் செய்து

மேற்படி வா.சா.ஆ.6 அசல் ஆவணத்தில் உள்ள முத்துசாமியின் கையெழுத்து மற்றும் கைரேகையும், இதர ஆவணங்களில் உள்ள முத்துசாமியின் கையெழுத்து மற்றும் கைரேகையும் ஒப்பீடு செய்து பார்க்க கைரேகை நிபுணருக்கு அனுப்ப நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. வா.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ள முத்துசாமியின் கையெழுத்து மற்றும் கைரேகையை ஒப்பீடு செய்து பார்க்க கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி மேற்படி கையெழுத்து மற்றும் கைரேகை முத்துசாமியின் கையெழுத்து மற்றும் கைரேகை அல்ல என்று நிரூபிக்கவில்லை.

13.17). மேற்படி ஆவணத்தில் உள்ள கையெழுத்து 21.05.1992 தேதியிட்ட ஆவணத்தில் உள்ள கையெழுத்து முத்துசாமியின் கையெழுத்து அல்ல என்பதை வாதிகள் தரப்பில் நிரூபிக்கவில்லை. எனவே அவ்வாறு மேற்படி ஆவணத்தில் உள்ளது முத்துசாமியின் கையெழுத்து அல்ல என்பதை நிரூபிக்காத நிலையில் மேற்படி ஆவணத்தில் முத்துசாமி கையெழுத்து செய்யவில்லை என்பது ஏற்புடையதல்ல.

13.18). மேற்கண்ட பரிசீலனையிலிருந்து 21.05.1992 தேதியிட்ட கிரைய ஆவணத்தில் உள்ள கையெழுத்து முத்துசாமியின் கையெழுத்து அல்ல என்பது வாதிகள் தரப்பில் உரிய சட்ட வழிமுறைகளை பின்பற்றி நிரூபிக்கவில்லை என எழுவினா - 1 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. மேலும், 21.05.1992 தேதியில் உள்ள கையெழுத்து வேறுபாடு உள்ளது என்பது வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்று எழுவினா - 2 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. எழுவினா 1 மேற்கண்டவாறு தீர்வு காணப்பட்டுள்ளதால், மேற்படி 21.05.1992 தேதியிட்ட கிரைய ஆவணம் செல்லாது என கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என எழுவினா 3-க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. எழுவினா 1 முதல் 3 வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்பட்டுள்ளது.

**<u>14). எழுவினா 4 மற்றும் 5-க்கான தீர்வு :-</u>**

| | |
|---|---|
| **எழுவினா - 4** | வாதிகள் வழக்கு சொத்தின் சட்டப்படியான அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் உள்ளார்களா? |
| **எழுவினா - 5** | வாதிகள் கோரிய நிரந்த உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா? |

14.1). வழக்கு சொத்தின் சட்டப்படியான அனுபவம் மற்றும் சுவாதீனத்தை காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே வாதிகள் வழக்கு சொத்தின் சட்டப்படியான அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்பது வாதிகள் தரப்பில் நிரூபிக்கவில்லை என்று எழுவினா 4 - க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

14.2). வாதிகள் வழக்கு சொத்தின் சட்டப்படியான அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்பது வாதிகள் தரப்பில் நிரூபிக்காததால், தாவா சொத்தை விற்பனை, குத்தகை, அடமானம், தானம், செட்டில்மென்ட் போன்ற எந்தவிதமான வில்லங்க விவகாரங்களுக்கும் பிரதிவாதி உட்படுத்தக்கூடாது என வாதிகள் கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என எழுவினா 5 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**<u>15). எழுவினா 6-க்கான தீர்வு :-</u>**

| | |
|---|---|
| **எழுவினா - 6** | வேறு பரிகாரம் என்ன? |

எழுவினா 1 முதல் 5 ஆனது மேற்கண்டவாறு தீர்வுகாணப்பட்டதால் வேறு எந்த பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என எழுவினா 6 க்கு தீர்வு காணப்படுகிறது.

**16). முடிவாக,**

1ம் வாதியின் கணவரிடம் பிரதிவாதி கிரயம் பெற்றதாகக் கூறப்படும் 21.05.1992 தேதிய 1732/1992 என்ற எண்ணில் சூலூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரத்தை செல்லாது என்று ரத்து செய்யக்கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று தீர்ப்பளிக்கப்படுகிறது. தாவா சொத்தை விற்பனை, குத்தகை, அடமானம், தானம், செட்டில்மென்ட் போன்ற எந்தவிதமான வில்லங்க விவகாரங்களுக்கும் பிரதிவாதி உட்படுத்தக்கூடாது என கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என தீர்ப்பளிக்கப்படுகிறது. வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17-ம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**சூலூர்.**

**சாட்சிகள் மற்றும் சான்றாவணப் பட்டியல்:**

**வாதி தரப்பு சாட்சிகள்:**

வா.சா.1 - முனியப்பன்

வா.சா.2 - பூபாலசுப்பிரமணியம்

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:**

| **ஆவண. எண்.** | **தேதி** | **ஆவணம்** | **ஆவணத்தின் தன்மை** |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 27.06.1979 | முத்துசாமி பெற்ற கிரயப் பத்திரம் | சான்றிட்ட நகல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.2 | 14.12.2007 | முத்துசாமியின் இறப்பு சான்றிதழ் | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. |
| வா.சா.ஆ.3 | 28.05.1979 | முத்துசாமி பெற்ற கிரய பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | 10.01.2009 | முத்துசாமியின் வாரிசு சான்றிதழ் | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. |
| வா.சா.ஆ.5 | 13.10.2014 | தாவா சொத்தின் வில்லங்க சான்றிதழ் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.6 | 21.05.1992 | பிரதிவாதி பெயரில் உள்ள கிரய பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.7 | 26.12.2006 | சூலூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி ரசீது | அசல் |
| வா.சா.ஆ.8 | 29.10.1986 | இந்திய தபால் மற்றும் முதலீட்டு மாறுதல் விண்ணப்பம் | அசல் |
| வா.சா.ஆ.9 | 06.10.1983 | வருமான வரி CLEARANCE CERTIFICATE | அசல் |
| வா.சா.ஆ.10 | 23.07.2003 | சூலூர் காவல் நிலைய புகார் ஏற்பு ரசீது | அசல் |
| வா.சா.ஆ.11 | 2005 முதல் 2009 | 1ம் வாதியின் குடும்ப அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. |
| வா.சா.ஆ.12 | - | பல்லடம் தனி வட்டாட்சியர் அவர்கள் முத்துசாமி பெயரில் வழங்கிய மனைவரி தோராய பட்டா எண்.1311 | அசல் |
| வா.சா.ஆ.13 | 03.07.2014 | மன்ற துணை வட்டாட்சியர் அவர்கள் கொடுத்த பட்டா மாறுதல் உத்தரவு | அசல் |
| வா.சா.ஆ.14 | 03.07.2014 | நத்தம் நில வரி திட்ட தூய சிட்டா | உண்மை நகல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.15 | - | பூபாலசுப்பிரமணியத்தின் ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்:**

பி.சா.1 - புஷ்பா

பி.சா.2 - செல்வராஜ்

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:**

| ஆவண. எண். | தேதி | ஆவணம் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| பி.சா.ஆ.1 | 28.03.2014 | தான செட்டில்மெண்ட் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.2 | - | கணிணி சிட்டா | பதிவிறக்க நகல் |

**சாட்சிய சான்றாவணங்கள் :**

| ஆவண. எண். | தேதி | ஆவணம் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| சா.சா.ஆ.1 | 14.02.2026 | சூலூர் சார் பதிவாளர் வழங்கிய அனுமதி கடிதம் | அசல் |
| சா.சா.ஆ.2 | 28.05.1979 | கிரய ஆவண எண்.880/1979 கொண்ட கிரய பத்திரம் | உண்மை நகல் |
| சா.சா.ஆ.3 | 27.06.1979 | கிரய ஆவண எண்.1085/1979 கொண்ட கிரய பத்திரம் | உண்மை நகல் |
| சா.சா.ஆ.4 | 21.05.1992 | கிரய ஆவண எண்.1732/1992 கொண்ட கிரய பத்திரம் | உண்மை நகல் |

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

சூலூர்

அசல் வழக்கு எண். 1075/2017

வரைவு/செவ்வை தீர்ப்புரை

நாள்: 17.03.2026